தினகரன் நீலகிரி

## இடுக்கி அருகே

# சதுரங்கப் பாறையில் பூத்துக்குலுங்கும் குறிஞ்சி மலர்



இடுக்கி மாவட்டம் கட்டப்பனாவை அடுத்துள்ள சதுரங்கப்பாறையில் நீலக்குறிஞ்சிமலர் பூத்துக்குலுங்குவதை பார்க்க ஏராளமான சுற்றுலாப்பயணிகள் அங்கு குவிந்தவாறு உள்ளனர்.

**பாலக்காடு, நவ.3:** கேரள மாநிலம் இடுக்கி மாவட்டம் கட்டப்பனாவை அடுத்துள்ள சதுரங்கப்பாறையில் நீலக்குறிஞ்சிமலர் பூத்துக்குலுங்குவதை பார்க்க ஏராளமான சுற்றுலாப்பயணிகள் அங்கு குவிந்தவாறு உள்ளனர்.

இடுக்கி மாவட்டத்தில் கட்டப்பனாவை அருகே உள்ள சுற்றுலாத்தலமான சதுரங்கப்பாறை. இங்கு 12 ஆண்டுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சி மலர்கள் தற்போது பூத்துள்ளது. இவை சுற்றுலா பயணிகளையும் கண்களை கவர்ந்தவாறு உள்ளது. இதனால் இங்கு காதல் ஜோடி, குடும்பத்தினரும், சுற்றுலா பயணிகளும் படையெடுத்து வருகின்றனர். பனிப்பொழி, கடுமையான குளிர் வீசுவதையும் பாராமல் மக்கள் தங்களது மொபைல் போன் மூலமாக புகைப்படம், வீடியோக்கள் எடுத்து மகிழ்ச்சியடைந்து வருகின்றனர்.



சதுரங்கப்பாறையில் பூத்துக்குலுங்கும் குறிஞ்சி மலர்கள்.

பாலக்காடு மாவட்டம் வடக்கஞ்சேரி அரசு டிப்போவிலிருந்து திருச்சூர், பெரும்பாவூர், கோதமங்கலம் வழியாக மூணாறுக்கும், கட்டப்பனா அரசு டிப்போவிலிருந்து மூணாறு, தேவிக்குளம், மறையூர், உடுமலை, பொள்ளாச்சி வழியாக பாலக்காட்டிற்கும் அரசுப்பஸ்கள் இயங்கி வருகின்றன. இந்த பஸ்சில் சீசன் துவங்கியுள்ள நிலையில் சுற்றுலா பயணிகளின் கூட்ட நெரிசல் அதிகரித்துள்ளது.

பாலக்காட்டிலிருந்து பொள்ளாச்சி, உடுமலை, மறையூர், தேவிக்குளம், வழியாக மூணாறு, கட்டப்பனா சென்று திரும்ப இவ்வழித்தடத்தில் பாலக்காடு வந்தடைகிறது. இடுக்கி மாவட்டத்திலிருந்து பாலக்காடு மாவட்டத்தில் விடுதிகளில் தங்கிப்படிக்கின்ற கல்லூரி, பள்ளி மாணவர்களுக்கும் இந்த பஸ்கள் பெரிதும் வசதியாக உள்ளது என மாணவர்கள் தெரிவித்துள்ளனர். உடுமலை மூணாறு வழித்தடத்தில் காட்டுயானைகள் கூட்டம், மான் கூட்டம், சிங்கவால் குரங்குகள், மயில்கள், வரையாடுகள் ஆகியவை மேய்வதை காட்சிகளை கண்டு ரசித்த வண்ணம் சுற்றுலாப்பயணிகள் வந்து செல்கின்றனர். மலையருவிகள், இயற்கைக் காட்சிகளை பார்க்க உகந்த சுற்றுலாத்தலமாகமூணாறு விளங்குகிறது. மேலும், டீ, காபி தோட்டங்கள் ஆகியவற்றின் பசுமையான காட்சியும் மக்களை மிகவும் கவர்ந்தவாறு உள்ளது.

# வளர்ச்சி திட்ட பணிகளை கலெக்டர் ஆய்வு

## தரமாகவும் உரிய காலத்தில் முடிக்கவும் அறிவுறுத்தல்

**கோத்தகிரி, நவ.3:** நீலகிரி மாவட்டம் நடுஹட்டி ஊராட்சிக்கு உட்பட்ட பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாடு வாரியத்தின் சார்பில் 14.76 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் இரண்டு அடுக்குகள் கொண்ட 164 குடியிருப்புகள் கட்டும் பணிகளை நேற்று கலெக்டர் அம்ரித் நேரில் பார்வையிட்ட ஆய்வு மேற்கொண்டார். பின்னர் வீடுகளை தரமாகவும் உரிய காலத்தில் முடித்திடவும் அறிவுறுத்தினார்.



குயின் சோலை ஆரம்ப பள்ளியில் கலெக்டர் அம்ரித் ஆய்வு மேற்கொண்டு குழந்தைகளுக்கு வழங்கப்படும் மதிய உணவுகளின் தரத்தினை பார்வையிட்டார்.

தொடர்ந்து நெடுகுளா ஊராட்சி பகுதியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் இரண்டின் கீழ் ரூ.22 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி கூடுதல் கட்டிடத்தினையும், தேனாடு ஊராட்சிக்குட்பட்ட குயின் சாலை முதல் கணபதிபுரம் வரை 15வது மத்திய, மாநில நிதி குழுவின் மூலம் ரூ.2 லட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட நடைபாதையினையும், தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் சோலூர்மட்டம் பகுதியில் ரூ.8.5 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள சுகாதார வளாகத்தினையும், ராஸ்டிர கிராம சுராஜ் திட்டத்தின் கீழ் ரூ.20 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் வேணாடு ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடத்தினையும், சோலூர் மட்டம் பகுதியில் ஆஷா யோஜன திட்டத்தின் கீழ் ரூ.1.70 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் வீடு கட்டுமாட்டன பணியையும், ரூ.54.20 லட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளை அதிகாரிகளிடம் கேட்டறிந்து விரைவில் பணி முடிக்குமாறு அறிவுறுத்தினார்.

நெடுகுளா தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் பயிர் கடன் நகை கடன் பதிவேடுகள் பராமரிக்கப்படுவதை பார்வையிட்டு சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் 2021-22ம் ஆண்டிற்கான இலக்கு மற்றும் கடன் தொங்கை வழங்கப்பட்ட விவரம் ஆகியவை குறித்து கேட்டறிந்தார்.

இ-சேவை மையத்தில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ் குறித்து ஆய்வு மேற்கொண்டார். நெடுகுளா ஊராட்சிக்கு உட்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டு அங்குள்ள நோயாளிகளிடம் அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்தும் செவிலியர்கள், மருத்துவர்களிடம் பதிவேடுகள் மற்றும் மருந்து பொருட்கள் இருப்புகள் மருந்துகளின் காலாவதி தேதி குறித்தும் கேட்டிருந்தார்.

குயின் சோலை ஆரம்ப பள்ளியில் ஆய்வு மேற்கொண்டு குழந்தைகளுக்கு வழங்கப்படும் மதிய உணவுகளின் தரத்தினை பார்வையிட்ட பின்பு, கறிக்கையூர் அரசு பழங்குடியினர் நல உண்டு உறைவிட உயர்நிலைப் பள்ளியை பார்வையிட்டு மாணவ, மாணவிகளுடன் வகுப்பறையில் அமர்ந்து ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பாடங்கள் கற்பிக்கும் முறையினையும், மாணவ, மாணவிகளின் வாசிக்கும் திறனையும் ஆய்வு செய்து மாணவ மாணவியர்கள் கட்டாயமாக உயர்கல்வி படிக்க வேண்டும் எனவும் அரசால் மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் திட்டங்களை குறித்தும் தெரிந்து கொண்டு பயன்பெற வேண்டும் எனவும், இடைநிறுத்தம் இல்லாத வகையில் ஆசிரியர்கள் தேவையான நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் இணைந்து மேற்கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

கோத்தகிரி வட்டாட்சியர் அலுவலகத்தில் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் வகையில் தீயணைப்புத்துறையினரின் சார்பில் அவசர காலத்தில் பயன்படுத்தப்படும் பொருட்களை பார்வையிட்டு அனைத்தும் சரியான முறையில் செயல்பாட்டில் உள்ளதா? என கேட்டறிந்து, செயல்முறை விளக்கத்தையும் பார்வையிட்டார்.

ஆய்வின்போது தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் உதவி பொறியாளர் விவேக், கோத்தகிரி வட்டாட்சியர் காயத்ரி, கோத்தகிரி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெயபால், ஆறுமுகம் உட்பட அரசு துறை அலுவலர்கள் பலர் உடன் இருந்தனர்.

## பாலக்காடு மாவட்டத்தில்

# டிஜிட்டல் ரீசர்வே திட்டம் துவக்கம்

**பாலக்காடு, நவ.3:** பாலக்காடு மாவட்டம் திருத்தாலா ஊராட்சியில் நேற்று எனது பூமி டிஜிட்டல் ரீசர்வே என்ற திட்டம் துவக்கவிழா நடைபெற்றது. இதனை கேரள மின்சார துறை அமைச்சர் கிருஷ்ணன் குட்டி தொடங்கி வைத்தார்.

இதனை தொடர்ந்து அமைச்சர் பேசியதாவது: பூமி உரிமையாளரின் நிலம் சம்பந்தமான ஆவணங்கள் சரிவர கைவசம் வைத்திருக்க வேண்டும்.

இதற்கு நில உரிமையாளர்கள் வருவாய்த்துறை அதிகாரிகளுடன் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். மாவட்டத்தில் 14 கிராமங்களில் டிஜிட்டல் ரீசர்வே தேர்வு செய்யப்பட்டுள்ளது. பாலக்காடு தாலுகாவில் 8 கிராமங்களும், மன்னார் காடு தாலுகாவில் 6 கிராமங்களும் உட்படுத்தப்பட்டுள்ளது. நவீன கருவிகள் உபயோகித்து டிஜிட்டல் ரீசர்வே அமைக்கப்படவுள்ளது.



பாலக்காடு மாவட்டம் திருத்தாலா ஊராட்சியில் எனது பூமி டிஜிட்டல் ரீசர்வே என்ற திட்டத்தை அமைச்சர் துவக்கி வைத்து பேசினார்.

சர்வே சம்பந்தமான எல்லா விபரங்களும் எனது பூமி போர்ட்டல் வழியாக பொதுமக்களுக்கு தெரிந்துகொள்ள முடியும். இது போன்று மாநிலத்தில் அனைத்து கிராமங்களிலும் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு அமைச்சர் பேசினார்.

எம்எல்ஏக்கள் முகமது முகஸில், வக்கீல் ஷம்சுதீன், சப்-கலெக்டர் தர்மலஸ்ரீ, திருத்தாலா ஊராட்சி தலைவர் வக்கீல் ரஜீனா, பட்டாம்பி நகராட்சி தலைவர் லட்சுமி குட்டி, சர்வே துணை இயக்குநர் ஆஷா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கிராம சபைக்கு லாரியில் சென்ற வீடியோ வைரல்

# அவதூறு பரப்பியவர் மீது நடவடிக்கை கோரி தூய்மை காவலர்கள் வேலை நிறுத்தம்

**பந்தலூர், நவ.3:** பந்தலூர் அருகே நெலாக்கோட்டை ஊராட்சியில் கிராம சபைக்கு லாரியில் தூய்மை காவலர்கள் சென்றபோது வீடியோ எடுத்து அவதூறு பரப்பியவர் மீது நடவடிக்கை கோரி வேலை நிறுத்ததில் ஈடுபட்டுள்ளனர்.

பந்தலூர் நெலாக்கோட்டை ஊராட்சியில் 54 தூய்மை காவலர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் ஊராட்சி பகுதியில் உள்ள வீடுகளுக்கு சென்று குப்பைகளை தரம் பிரித்து சேகரம் செய்வது, தூய்மை பணிகளை மேற்கொள்வது மற்றும் கொரோனா தொற்று காலத்தில் சுகாதாரப் பணிகள் மேற்கொண்டது, கிருமிநாசினி தெளிப்பது உள்ளிட்ட பணிகளில் ஊராட்சி நிர்வாகம் பயன்படுத்தி வந்தது. இந்நிலையில் தமிழக அரசு நவம்பர் 1ம் தேதியை உள்ளாட்சிகள் தினமாக அறிவிப்பு செய்து ஊராட்சியில் கிராம சபை கூட்டத்தை கூட்டி பொது மக்கள் மத்தியில் தூம்மை பணியாளர்கள் மற்றும் தூய்மை காவலர்களை கௌரவிக்க வேண்டும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியதால் நேற்று முன்தினம் நெலாக்கோட்டை ஊராட்சியில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது.

அதில் கலந்து கொள்வதற்காக ஊராட்சியில் உள்ள மினி லாரியில் தூய்மை காவலர்களை அழைத்து வந்துள்ளனர். தூய்மை காவலர்களை ஏற்றி வந்த லாரியை பிதர் காடு பகுதியை சேர்ந்த சங்கீதா என்பவர் செல்போனில் படம் எடுத்து சமூக வலைதளத்தில் பதிவிட்டதால் நெலாக்கோட்டை போலீசார் தூய்மை காவலர்களை ஏற்றி சென்ற ஊராட்சி லாரிக்கு ரூ.500 அபராதம் விதித்து ஓட்டுநர் லத்தீப் (48) என்பவரது ஓட்டுனர் உரிமத்தை காவல் நிலையத்தில் ஒப்படைக்க வேண்டும் என போலீசார் அறிவுறுத்தியுள்ளனர். அதனால் தூய்மை காவலர்கள் தாங்கள் சென்ற லாரியை செல்போனில் படம் எடுத்து சமூக வலைத்தளத்தில் அவதூறு செய்தி பரப்பிய சங்கீதா மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என தூய்மை பணியாளர்கள் நெலாக்கோட்டை காவல்நிலையத்தில் நேற்று புகார் தெரிவித்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

சம்பவம் குறித்து நெலாக்கோட்டை ஊராட்சி தலைவர் டெர்மிளா பன்னீர்செல்வத்திடம் கேட்டபோது, மலை பகுதியில் தூய்மை காவலர்கள் ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு செல்வதற்கு மினி லாரியை தேவைப்படும் போது பயன்படுத்தி வருகிறோம். தூய்மை காவலர்களை கிராம சபை கூட்டத்தில் கௌரவிக்க ஏற்பாடு செய்திருந்தோம் அதற்காக அவர்கள் கூட்டத்திற்கு வந்த லாரியை படம்பிடித்து சமூகவலைதளத்தில் அவதூறு பரப்பி இருப்பது வேதனையாக உள்ளது.

தூய்மை காவலர்கள் பணி புறக்கணிப்பு செய்தால் குப்பைகள் தேங்கி பாதிப்பு ஏற்படும் என்றார்.

# குடியிருப்பு பகுதியில் புகுந்த மலைப்பாம்பு

**கூடலூர், நவ.3:** கூடலூரை அடுத்த அள்ளூர் வயல் பகுதி அருகிலுள்ள தனியார் தோட்டம் வழியாக சுமார் 15 அடி நீளம் உள்ள மலை பாம்பு ஒன்று பழங்குடியிருப்பு பகுதிக்குள் வந்துள்ளது. இதனால் அச்சமடைந்த மக்கள் இது குறித்து கூடலூர் வனத்துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். இதனை தொடர்ந்து சம்பவ பகுதிக்கு வந்த வனத்துறையினர் பாதுகாப்பு உபகரணங்களுடன் மலைப்பாம்பை லாவகமாக பிடித்தனர். பின்னர் பாம்புவை வனத்துறையினர் அடர்வனப் பகுதிக்குள் கொண்டு சென்று விடுவித்தனர்.



வனத்துறையினரால் உயிருடன் பிடிக்கப்பட்ட மலைப் பாம்பு.

## பாலக்காட்டில்

# போதை ஒழிப்பு விழிப்புணர்வு மாரத்தான்




பாலக்காடு நகராட்சியில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு மாரத்தான் நேற்று நடைபெற்றது.

**பாலக்காடு, நவ.3:** கேரள தினத்தையொட்டி பாலக்காடு மாவட்ட நேரு யுவ கேந்திரம் மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம் நேற்று நடைபெற்றது. இதனை துணை கலெக்டர் ரஞ்ஜித் கொடியசைத்து தொடங்கி வைத்தார். பாலக்காடு நகராட்சி தலைவர் கிருஷ்ணதாஸ் தலைமை தாங்கினார். மாரத்தான் ஓட்டத்தின் மூலமாக மக்களிடையே மாணவர்கள் போதை ஒழிப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

சித்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் கேரள மின்வாரியத்துறை அமைச்சர் கிருஷ்ணன் குட்டி தலைமையில் மாணவ, மாணவிகள் போதை ஒழிப்பு குறித்து உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். மாவட்டத்தில் அனைத்துப் பள்ளி, கல்லூரிகளிலும் போதை ஒழிப்பு குறித்து விழிப்புணர்வும், தெருவு நாடகங்களும் மாணவர்களிடையே இடம்பெற்றிருந்தன.

சாலையில் மனித சங்கிலி அமைத்து போதைப்பொருட்களால் ஏற்படுகின்ற தீமைகளை குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினர். போதை ஒழிப்பு விழிப்புணர்வு முகாம்கள் வரும் டிசம்பர் 1ம் தேதி வரையில் நடைபெற உள்ளது.

# சீசன் முடிந்தும் ஊட்டியில் குவியும் சுற்றுலா பயணிகள்

## சிறு வியாபாரிகள் மகிழ்ச்சி

**ஊட்டி, நவ. 3:** இரண்டாம் சீசன் முடிந்தும் ஊட்டியில் சுற்றுலா பயணிகள் கூட்டம் காணப்படுவதால், வியாபாரிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

சுற்றுலா நகரமான ஊட்டிக்கு நாள் தோறும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகின்றனர். எனினும் விடுமுறை நாட்கள் மற்றும் தொடர் விடுமுறை நாட்களின் போதும், முதல் மற்றும் இரண்டாம் சீசன் போதும் வழக்கத்தை விட கூடுதல் சுற்றுலா பயணிகள் வருகின்றனர்.

முதல் சீசன் போது, பள்ளிகளுக்கு கோடை விடுமுறை என்பதால் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் தமிழகம் மற்றும் பிற மாநிலங்களில் இருந்து அதிகளவு சுற்றுலா பயணிகள் வருவார்கள். சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் பொருட்டு பல்வேறு நிகழ்ச்சிகள், மலர் கண்காட்சி, காய்கறி, பழம் மற்றும் ரோஜா கண்காட்சி போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது.

2ம் சீசனான செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் வடமாநிலம், வெளிநாட்டை சேர்ந்த சுற்றுலா பயணிகளும் அதிகளவு வருவார்கள். அதே போல 2ம் சீசன் போது தமிழகத்தில் ஆயுத பூஜை விடுமுறை, கர்நாடகாவில் தசரா மற்றும் கேரளாவில் ஓணம் பண்டிகை விடுமுறை என பண்டிகை விடுமுறை நாட்களில் ஊட்டி வரும் சுற்றுலா பயணிகள் கூட்டம் அதிகம் காணப்படும். இதனால், ஊட்டியில் உள்ள அனைத்து சுற்றுலா தலங்களும் களைகட்டின. கடந்த 3 நாட்களாக காலநிலையில் மாற்றம் ஏற்பட்டு அவ்வப்போது சாரல் மழை பெய்து வருகிறது. இதனால் சுற்றுலா பயணிகள் கூட்டம் குறையும். மேலும், சீசன் முடிந்ததால் சுற்றுலா பயணிகள் வருகை குறைந்து காணப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ஊட்டி வரும் சுற்றுலா பயணிகள் கூட்டம் குறையவில்லை. நேற்றும் ஊட்டிக்கு ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்தனர். இதனால், சுற்றுலா தலங்களில் மக்கள் கூட்டம் காணப்பட்டது. சீசன் முடிந்தும் சுற்றுலா பயணிகள் கூட்டம் ஊட்டியில் காணப்படுவதால், சுற்றுலா பயணிகளை நம்பி பிழைப்பு நடத்தி வரும் சிறு வியாபாரிகள் மகிழ்ச்சியை டைந்துள்ளனர்.


ICICI Home Finance

**கார்பரேட் அலுவலகம்:** ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், ஐசிஐசிஐ எச்எஃப்சி டவர், அந்தேரி–குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை–400059, இந்தியா

**கிளை அலுவலகம்:** முதல் தளம், கதவு எண் 66, ஜி.ஜி. டவர்ஸ், குமரன் சாலை, டவுண் ஹால் எதிரில், திருப்பூர்–641601

[விதி 8(6) விதிமுறையை காண்க]

அசையாச் சொத்துகள் விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு.

இதன்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாக மேலும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டு கடனீந்தோரிடம் அடமானம் வைக்கப்பட்ட/உரிமை அளிக்கப்பட்ட, ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் **அடையாளப்பூர்வ சுவாதீனம்** செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது இதன்கீழ் கொடுக்கப்பட்ட குறு விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

| வ. எண் | கடன்தாரர்(கள்)/ உப கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர். கடன் கணக்கு எண் | தெரிந்த வில்லங்கங்கள் ஏதேனுமிருந்தால் அவற்றுடன் கூடிய கடனீட்டுச் சொத்து(கள்) விவரங்கள் | நிலுவைத் தொகை | நிர்ணய விலை / முன்வைப்புத் தொகை | சொத்து பார்வையிடும் நாள் மற்றும் நேரம் | ஏலம் நாள் & நேரம் |
|---|---|---|---|---|---|---|
| (அ) | (ஆ) | (இ) | (ஈ) | (உ) | (ஊ) | (எ) |
| 1. | இலட்சுமணன் M (கடன்தாரர்) கடன் கணக்கு எண் NHTIR00000875044 NHTIR00000875042 | கதவு எண் 30, டி.எஸ். எண் 4/81, பிள்ளையார் கோவில் தெரு, கல்லம்பாளையம், திருப்பூர் வட்டம், மாநகராட்சி, திருப்பூர் மாவட்டம், தமிழ்நாடு 641602 | Rs. 36,35,139/- 1st Nov, 2022 | Rs. 28,43,287/- / Rs. 2,84,330/- | 15th Nov, 2022 11:00 AM- 03:00 PM | 18th Nov, 2022 02:00 PM- 03:00 PM |

இயங்குதள ஏலம் எங்கள் ஏல முகமை ஆக்சன் டைகர் இணையதளத்தில் **(URL இணைப்பு– https://sarfaesi.auctiontiger.net/EPROC/)** நடத்தப்படும். அடமானதாரர்கள்/அறிவிக்கப்படுவோர் **17 நவம்பர், 2022 மாலை 05.00 மணிக்கு** முன்பு வரை மொத்த நிலுவைகளை மேற்கொண்டு வட்டியுடன் செலுத்த ஒரு கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது இல்லையெனில் இந்த கடனீட்டுச் சொத்துகள் மேற்கூறிய அட்டவணைப்படி விற்பனை செய்யப்படும்.

எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) **ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், முதல் தளம், கதவு எண் 66, ஜி.ஜி. டவர்ஸ், குமரன் சாலை, டவுண் ஹால் எதிரில், திருப்பூர்–641601** இடத்தில் **17 நவம்பர், 2022 மாலை 04.00 மணி** அல்லது அதற்கு முன்பு முன்வைப்புத்தொகை (EMD) RTGS/ கேட்பு வரைவோலை (DD) (நிரல் உ காண்க) சமர்ப்பிக்கலாம். எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) மேற்குறிப்பிட்ட காலத்தின்படி தங்கள் ஒப்பந்தப்புள்ளியை சமர்ப்பிக்க இயலவில்லை எனில் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களின் கையொப்பமிட்ட பிரதியானது **ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், முதல் தளம், கதவு எண் 66, ஜி.ஜி. டவர்ஸ், குமரன் சாலை, டவுண் ஹால் எதிரில், திருப்பூர்–641601** இடத்தில் **17 நவம்பர், 2022 மாலை 05.00 மணி** அல்லது அதற்கு முன்பு சமர்ப்பிக்கப்படலாம் என்பதை கவனத்தில் கொள்ளவும். முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை (DD) ஒரு தேசியமயாக்கப்பட்ட/ அட்டவணையிடப்பட்ட வங்கியிலிருந்து **திருப்பூரில்** மாற்றத்தக்க வகையில் **"ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்–ஏலம்"** என்ற பெயரில் பெறப்பட வேண்டும்.

சொத்து பார்வையிடுதல், ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல் குறித்த அனைத்து மேற்கொண்டு சந்தேகதீர்வுகளுக்கு, **ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடை 7021072869** இல் தொடர்பு கொள்ளவும்.

அதிகாரப்பூர்வ அதிகாரி எந்த மேற்கொண்டு காரணங்களையும் தெரிவிக்காமல் ஏதேனும் அல்லது அனைத்து ஏலப்புள்ளிகளையும் நிராகரிக்க உரிமை கொண்டுள்ளார்.

விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, காண்க https://www.icicihfc.com/

நாள் : நவம்பர் 03, 2022
இடம் : திருப்பூர்

அதிகாரப்பூர்வ அதிகாரி
ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்



POONAWALLA HOUSING FINANCE — Apna Ghar, Apni Pehchan

**பூனாவால்லா வீட்டுவசதி நிதி லிமிடெட்**
(முன்னதாக, மாக்மா வீட்டுவசதி நிதி லிமிடெட்)
பதிவு அலுவலகம்: 602, 6வது தளம், ஜீரோ ஒன் தகவல்தொழிற்நுட்பப் பூங்கா, சர்வே எண் 79/1, கோர்படி, முந்த்வா சாலை, புனே–411036

**சர்பாசி சட்டம், 2002 இன் பிரிவு 13(2) கீழ் கோரிக்கை அறிவிப்பு**

கீழே குறிப்பிட்ட கடன்தாரர்கள்/ உப–கடன்தாரர்கள் /ஜாமீன்தாரர்கள் ஆகிய நீங்கள் மாக்மா வீட்டுவசதி நிதி லிட். "MHFL"தற்போது பூனாவால்லா வீட்டுவசதி நிதி லிட். "PHFL" ஆக மறுபெயரிடப்பட்டதன் வசமிருந்து உங்கள் அசையாச் சொத்து/கள் அடமானம் மூலம் சொத்துக்கு ஈடான வீட்டுக் கடன்கள் / கடன் வசதி(கள்) பெற்றிருக்கிறீர்கள். நீங்கள் பணம் தி–ருப்பிச் செலுத்த தவறினீர்கள் எனவே, உங்கள் கடன்/கள் செயல்படா சொத்துகள் ஆக வகைப்படுத்தப்பட்டது. நிலுவைத்தொகைகளை வசூலிப்பதற்காக பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 இன் பிரிவு 13(2) கீழ் கடைசியாக தெரிந்த முகவரிகளுக்கு ஒரு கோரிக்கை அறிவிப்பு அனுப்பப்பட்டது இருந்தபோதும் அது பட்டுவாடா ஆகாமல் திரும்பியுள்ளன. எனவே அதன் உள்ளடக்கங்கள் உங்களுக்கு மாற்று பட்டுவாடா சேவையாக மற்றும் வழியில் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 3(1) உடன் சட்டத்தின் பிரிவு 13(2) இன்படி இங்கே பிரசுரிக்கப்படுகின்றன.

கடன்தாரர்கள், உப–கடன்தாரர்கள், ஜாமீன்தாரர்கள், கடனீடுகள், நிலுவைத்தொகைகள், பிரிவு 13(2) கீழ் அனுப்பிய கோரிக்கை அறிவிப்பு மற்றும் அதன்கீழ் கோரப்பட்டத் தொகை ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

| வ. எண் | கடன்தாரர், உப-கடன்தாரர், ஜாமீன்தாரர் பெயர் மற்றும் கடன் தொகை | கடனீட்டுச் சொத்து விவரங்கள் | கோரிக்கை அறிவிப்பு நாள் | நிலுவைத்தொகை ₹ இல் |
|---|---|---|---|---|
| 1. | பெருமாள் சுந்தரம், மாலதி K கடன் தொகை: ₹575000/– கடன் எண்: HL/0118/H/17/100034 | கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், கிணத்துக்கடவு சார்–பதிவு மாவட்டம், மதுக்கரை வட்டம், ஒத்தக்கல்மண்டபம் கிராமத்தில், Sf எண் 557/1,2, Sf. எண் 561/A, 1b, 2, Sf. எண் 561/1, Sf. எண் 566/1a, 1b, 2a & 2b ஆகியவற்றில், மனை எண் 24 என்ற 120 ச.மீட்டர் (1292 சதுரடி) பரப்பளவில், கட்டிடத்துடன் பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள அடமானச் சொத்தின் அனைத்து துண்டு மற்றும் பகுதி. **வடக்கில்:** மனை எண் 23; **தெற்கில்** கீழை–மேல் மனைப்பிரிவுத் திட்டம் சாலை; **கிழக்கில்** மனை எண் 25; **மேற்கில்** தென்–வடல் மனைப்பிரிவுத் திட்டம் சாலை. | 23/04/2022 | ₹582845.30 (ரூபாய் ஐந்து இலட்சத்து எண்பத்திரண்டு ஆயிரத்து எண்ணூற்று நாற்பத்தைந்து மற்றும் பைசா முப்பது மட்டும்) பணம் திருப்பிச் செலுத்தும் நாள் வரை ஆண்டுக்கு 12.00% விகிதத்தில் மேற்கொண்டு வட்டியுடன். |

எனவே கடன்தாரர்/கள் மற்றும் உப–கடன்தாரர்/கள் / ஜாமீன்தாரர்கள் ஆகிய நீங்கள் மேற்குறிப்பிட்ட கோரப்பட்டத் தொகையை இங்கே மேலே குறிப்பிட்டவாறு மேற்கொண்டு வட்டியுடன் இந்த அறிவிப்பின் 60 நாட்களுக்குள் முழுமையாகச் செலுத்துமாறுக் கோரப்படுகிறீர்கள் தவறினால் கீழே கையொப்பமிட்டவர் மேற்குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்து/களை அமலாக்கம் செய்ய சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாவார். அதேவேளையில் நீங்கள், மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(13) இன்படி, எங்கள் ஒப்புதலின்றி விற்பனை, குத்தகை அல்லது பிறவழியில் மேற்கூறிய கடனீட்டுச் சொத்துகளை பெயர்மாற்றம் செய்வதற்கு தடை செய்யப்பட்டிருக்கிறீர்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

இடம்: தமிழ்நாடு
நாள்: 03.11.2022

பூனாவால்லா வீட்டுவசதி நிதி லிமிடெடுக்காக
(முன்னதாக மாக்மா வீட்டுவசதி நிதி லிமிடெட் ஆக அறியப்பட்டது)
அதிகாரப்பூர்வ அதிகாரி